# TNPSC TET SI EXAM

## 3. 6ஆம் வகுப்பு Q அறிவியல் தேர்வு

6th Standard

1) ஒரு பொருளை வெப்பப்படுத்தும்பொழுது, அதிலுள்ள மூலக்கூறுகள்

(a) வேகமாக நகரத் தொடங்கும் (b) ஆற்றலை இழக்கும் (c) கடினமாக மாறும்
(d) லேசாக மாறும்

2) வெப்பத்தின் அலகு

(a) நியூட்டன் (b) ஜூல் (c) வோல்ட் (d) செல்சியஸ்

3) $30^0$C வெப்பநிலையில் உள்ள ஒரு லிட்டர் நீரும், $50^0$C வெப்பநிலையில் உள்ள ஒரு லிட்டர் நீரும் ஒன்றாகச் சேரும்பொழுது, உருவாகும் நீரின் வெப்பநிலை

(a) $80^0$C (b) $50^0$Cக்கு மேல் $80^0$Cக்குள் (c) $20^0$C (d) ஏறக்குறைய $40^0$C

4) $50^0$C வெப்பநிலையில் உள்ள ஓர் இரும்புக் குண்டினை, $50^0$C வெப்பநிலையில் உள்ள நீர் நிரம்பிய முகவையில் போடும்பொழுது வெப்பமானது,

(a) இரும்புக்குண்டிலிருந்து நீருக்குச் செல்லும்
(b) இரும்புக் குண்டிலிருந்து நீருக்கோ (அல்லது) நீரிலிருந்து இரும்புக் குண்டிற்கோ மாறாது.
(c) நீரிலிருந்து இரும்புக்குண்டிற்குச் செல்லும் (d) இரண்டின் வெப்பநிலையும் உயரும்

5) வேதி ஆற்றலை மின்னாற்றலாக மாற்றும் சாதனம்


(a) மின் விசிறி (b) சூரிய மின்கலன் (c) மின்கலன் (d) தொலைக்காட்சி


6) மின்சாரம் தயாரிக்கப்படும் இடம்

(a) மின்மாற்றி (b) மின்உற்பத்தி நிலையம் (c) மின்சாரக் கம்பி (d) தொலைக்காட்சி

7) மின்கல அடுக்கின் சரியான குறியீட்டைத் தேர்ந்தெடு





(a) 

(b) 

(c) 

(d) 

8) கீழ்க்கண்ட மின்சுற்றுகளில் எதில் மின்விளக்கு ஒளிரும்?

(a) 
(b) 
(c) 
(d) 

9) கீழ்க்கண்டவற்றுள் எது நற்கடத்தி?

(a) வெள்ளி (b) மரம் (c) அழிப்பான் (d) நெகிழி

10) பனிக்கட்டி நீராக உருகும்போது ஏற்படும் மாற்றம் __________ ஆகும்.

(a) இடமாற்றம் (b) நிற மாற்றம் (c) நிலை மாற்றம் (d) இயைபு மாற்றம்

11) ஈரத்துணி காற்றில் உலரும் போது ஏற்படும் மாற்றம் ________ ஆகும்.

(a) வேதியியல் மாற்றம் (b) விரும்பத்தகாத மாற்றம் (c) மீளா மாற்றம்
(d) இயற்பியல் மாற்றம்

12) பால் தயிராக மாறுவது ஒரு ________ ஆகும்.

(a) மீள் மாற்றம் (b) வேகமான மாற்றம் (c) மீளா மாற்றம் (d) விரும்பத்தகாத மாற்றம்

13) கீழுள்ளவற்றில் விரும்பத்தக்க மாற்றம் எது?

(a) துருப்பிடித்தல் (b) பருவநிலை மாற்றம் (c) நில அதிர்வு (d) வெள்ளப்பெருக்கு

14) காற்று மாசுபாடு, அமில மழைக்கு வழிவகுக்கும், இது ஒரு ________ ஆகும்.

(a) மீள் மாற்றம் (b) வேகமான மாற்றம் (c) இயற்கையான மாற்றம்
(d) மனிதனால் ஏற்படுத்தப்பட்ட மாற்றம்

15) காற்றில் நைட்ரஜனின் சதவீதம் ________

(a) 78% (b) 21% (c) 0.03% (d) 1%

16) தாவரங்களில் வாயுப் பரிமாற்றம் நடைபெறும் இடம் ________ ஆகும்.

(a) இலைத்துளை (b) பச்சையம் (c) இலைகள் (d) மலர்கள்

17) காற்றுக் கலவையில் எரிதலுக்கு துணைபுரியும் பகுதி ________ ஆகும்.

(a) நைட்ரஜன் (b) கார்பன்-டை-ஆக்சைடு (c) ஆக்சிஜன் (d) நீராவி

18) உணவு பதப்படுத்தும் தொழிற்சாலையில் நைட்ரஜன் பயன்படுத்தப்படுகிறது ஏனெனில் ________.

(a) உணவிற்கு நிறம் அளிக்கிறது (b) உணவிற்கு சுவை அளிக்கிறது.

(c) உணவிற்கு புரதத்தையும், தாது உப்புக்களையும் அளிக்கிறது.

(d) உணவுப் பொருளை புதியதாகவே இருக்கும்படிச் செய்கின்றது.

19) காற்றில் உள்ள ________ மற்றும் ________ வாயுக்களின் கூடுதல் காற்றின் 99% இயைபாகிறது.

i. நைட்ரஜன்
ii. கார்பன்-டாய்-ஆக்சைடு
iii. மந்த வாயுக்கள்
iv. ஆக்சிஜன்

(a) i மற்றும் ii (b) i மற்றும் iii (c) ii மற்றும் iv (d) i மற்றும் iv

20) செல்லின் அளவைக் குறிக்கும் குறியீடு

(a) சென்டி மீட்டர் (b) மில்லி மீட்டர் (c) மைக்ரோ மீட்டர் (d) மீட்டர்

21) நுண்ணோக்கியில், பிரியா செல்லைப் பார்க்கும் போது அச்செல்லில் செல்சுவரும் நியூக்ளிசும் இருக்கிறது.பிரியா பார்த்த செல்.

(a) தாவர செல் (b) விலங்கு செல் (c) நரம்பு செல் (d) மீட்டர்

22) யூகேரியோட்டின் கட்டுப்பாட்டு மையம் எனப்படுவது

(a) செல் சுவர் (b) நியூக்ளியஸ் (c) நுண்குமிழ்கள் (d) பசுங்கணிகம்

23) கீழே உள்ளவற்றில் எது ஒரு செல் உயிரினம் அல்ல?

(a) ஈஸ்ட் (b) அமீபா (c) ஸ்பைரோ கைரா (d) பாக்டீரியா

24) யூகேரியோட் செல்லில் நுண்ணுறுப்புகள் காணப்படும் இடம்

(a) செல்சுவர் (b) சைட்டோபிளாசம் (c) உட்கரு(நியூக்ளியஸ்) (d) நுண்குமிழ்கள்

25) மனிதனின் இரத்த ஓட்ட மண்டலம் கடத்தும் பொருள்கள் ________

(a) ஆக்சிஜன் (b) சத்துப் பொருள்கள் (c) ஹார்மோன்கள் (d) இவை அனைத்தும்

26) மனிதனின் முதன்மையான சுவாச உறுப்பு ________

(a) இரைப்பை (b) மண்ணீரல் (c) இதயம் (d) நுரையீரல்கள்

27) நமது உடலில் உணவு மூலக்கூறுகள் உடைக்கப்பட்டு சிறிய மூலக்கூறுகளாக மாற்றப்படும் நிகழ்ச்சி இவ்வாறு அழைக்கப்படுகிறது.

(a) தசைச் சுருக்கம் (b) சுவாசம் (c) செரிமானம் (d) கழிவு நீக்கம்

28) உள்ளீட்டுக்கருவி அல்லாதது எது?

(a) சுட்டி (b) விசைப்பலகை (c) ஒலிபெருக்கி (d) விரலி

29) மையச்செயலகத்துடன் திரையை இணைக்கும் கம்பி எது?

(a) ஈதர்வலை (Ethernet) (b) வி.ஜி.ஏ.(VGA) (c) எச்.டி.எம்.ஐ.(HDMI) (d) யு.எஸ்.பி.(USB)

30) கீழ்வருவனவற்றுள் உள்ளீட்டுக்கருவி எது?

(a) ஒலிபெருக்கி (b) சுட்டி (c) திரையகம் (d) அச்சுப்பொறி

31) கீழ்வருவனவற்றுள் கம்பி இல்லா இணைப்பு வகையைச் சேர்ந்தது எது?

(a) ஊடலை (b) மின்னலை (c) வி.ஜி.ஏ.(VGA) (d) யு.எஸ்.பி.(USB)

32) விரலி ஒரு ________ ஆக பயன்படுகிறது.

(a) வெளியீட்டுக்கருவி (b) உள்ளீட்டுக்கருவி (c) சேமிப்புக்கருவி (d) இணைப்புக்கம்பி

33) மனித உடலின் வெப்பநிலையை அளக்கப் பயன்படும் வெப்பநிலைமானி________

34) ஒரு பொருளில் இருந்து மற்றொரு பொருளுக்கு வெப்பம் பரவுதல்______ எனப்படும்.

35) வெள்ளை நிற ஆடையை விட_______ நிற ஆடை அதிக வெப்பத்தை உட்கவரும்.

36) முதன்மையான வெப்ப மூலம்_______

37) வெப்பத்தினால் பொருளின் நீளத்தில் ஏற்படும் அதிகரிப்பு_______ எனப்படும்.

38) மின்பொருட்களின் குறியீடுகளைப் பயன்படுத்தி வரையப்படும் மின்சுற்று______ என அழைக்கப்படுகிறது.

39) மின்விளக்கில் உள்ள மின்னிழை______ உலோகத்தால் செய்யப்பட்டது.

40) மின்நிலையங்களின் உள்ளே உள்ள பெரிய சுழலும் சக்கரங்கள்_______ என்று அழைக்கப்படும்.

41) மின்சாரத்தை உருவாக்கும் மூலங்கள்______ எனப்படும்.

42) ஒரு முறை மட்டுமே பயன்படுத்தக் கூடிய மின்கலன்________ மின்கலன் எனப்படும்.

43) நறுமண பத்திக்குச்சி எரிதல் ஒரு______ மாற்றம்.

44) நீர் அதன் பிற இரண்டு நிலைமைகளுக்கு மாறும் நிகழ்வுகள் _____ மாற்றம் ஆகும்.

45) சுவாசித்தல் ஒரு_____ மாற்றம்.

46) நத்தை நகர்தலும் நகம் வளர்தலும்_____ வகை மாற்றமாகும்.

47) ஆப்பிள் பழத்தின் வெட்டிய பகுதிகளில் காணப்படும் பழுப்புநிறத் திட்டுக்கள்_______ மாற்றத்தைக் காட்டுகின்றன.

48) உயரே செல்லச் செல்ல புவியின் ஈர்ப்பு விசை________

49) ______ தெளிந்த சுண்ணாம்பு நீரைப் பால் போலாக்குகிறது.

50) காற்றில் 1/5 பங்கு உள்ள வாயு_______

51) காற்றில் அதிகளவு நீராவி காணப்படும் பகுதி______

52) ஸ்பொமட்டா என்ற மிகச்சிறிய துளைகள்_____ ல் காணப்படுகின்றன.

53) செரிக்கப்பட்ட உணவு + $O_2 \rightarrow CO_2$ + $H_2O$ (வாயு) + ஆற்றல்,இவ்வினை_________

54) உள்ளிழுக்கும் காற்றில் அதிகம் காணப்படுவது_______

55) கார்பன் டை ஆக்சைடு வாயு, திண்ம நிலையில் காணப்படும் வெப்பநிலை________

56) சூரியனிலிருந்து வரும் தீங்கு விளைவிக்கும் கதிர்களைத் தடுப்பது______

57) ஒளிச்சேர்க்கையை விலங்குகள் தங்கள்______ ப் பயன்படுத்திக் கொள்கின்றன.

58) மூளையைச் சுற்றி பாதுகாக்கும் மூன்று உறைகள்_______ எனப்படும்.

59) தோல் சூரிய ஒளியை பயன்படுத்தி வைட்டமின்_________ஐ உற்பத்தி செய்கிறது.

60) நாம் உணவாகவும் தண்ணீராகவும் ஒரு நாளைக்கு______ லிட்டர் நீரை பருகுகிறோம்.

61) ______ சிறுநீரகத்தின் அடிப்படை செயல் அலகு.

62) நமது உடலில்______ % நீர் உள்ளது.

63) நமது விலா எலும்புக்கூடு______ இணை எலும்புகளால் ஆனது.

64) நமது உடலின் நீளமான எலும்பு______ ஆகும்.

65) பிறந்த குழந்தையின் உடலில்_____ க்கும் அதிகமான எலும்புகள் உள்ளன.

66) ஹயாய்டு எலும்பு________ன் அடித்தளத்தில் உள்ளது.

67) ______ எலும்பைத் தசையுடன் இணைக்கிறது.

68) இதயத்தின் சுவர்கள்______ தசையாலானது.

69) உணவுப் பாதை______ நீளமுடையது.

70) _____ வயதைக் கடந்த ஒவ்வொரு ஆரோக்கியமான மனிதனும் இரத்ததானம் செய்யலாம்.

71) ______ ஆக்சிஜன் மற்றும் யூரியா உள்ள இரத்தத்தை சிறுநீரகங்களுக்குக் கொண்டு செல்கிறது.

72) மூளையின் சாம்பல் நிறப்பகுதியில்______ அளவு நீர் உள்ளது.

73) கணினியின் மூளை என்பது______

74) சுட்டியில் காணப்படும் பொத்தான் எண்ணிக்கை______

75) திரையகம் ________ வகைப்படும்.

76) ________ என்பது நுண்கணினிக்கு எடுத்துக்காட்டு.

77) இணைய வசதியை இணைப்பு வடம் இல்லாமல் பெற_____ பயன்படும்.

78) வெங்காய செல். மாமர செல், ரோஜா செடி செல், நரம்புசெல் (செல்சுவரைப் பொறுத்து)

79) பாக்டீரியா, ஸ்பைரோகைரா, அமீபா, கிளாமிடாமோனஸ் (செல்லின் எண்ணிக்கையைப் பொறுத்து)

80) எஸ்செரிச்சியா கோலை, தாவரங்கள், விலங்குகள், ஸ்பைரோகைரா (உட்கருச் சவ்வை பொறுத்து)

81) செல்சுவர், பசுங்கணிகம், பெரியநுண்குமிழ், சென்ட்ரியோல்
(தாவரசெல்லைப் பொறுத்து)

82) சிறுநீரகம், நெஃப்ரான், சிறுநீர் நாளம், நியூரான், சிறுநீர்ப்புறவழி

83) பெருந்தமனி இதயம், தமனி, சிரை, நரம்பு செல்

84) நுண்காற்றுப்பை, தொண்டை, வாய், முதல்நிலை மூச்சுக்குழல், மூச்சுக்குழல்,

85) தைமஸ் சுரப்பி, உமிழ்நீர்ச் சுரப்பி, அட்ரினல் சுரப்பி, தைராய்டு சுரப்பி, பீனியல் சுரப்பி.